IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**S.T.C.No. 1882/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Sworn Statement | : | Complainant | Caste | : | |
| Name | : | முருகன் | Age | : | 61 |
| S/o | : | கருப்பப்பிள்ளை | Occupation | : | விவசாயம் |
| Village | : | பாரதிநகர் | | | |
| Taluk | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 11th day of June 2026.

**11.06.2026**

**முதல் விசாரணை**

**எதிரி ஆஜர்**

நான் இந்த வழக்கின் புகார்தாரர் ஆவேன். எனது சத்திய நிரூபண வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அந்த பத்திரத்தை நான் சொல்ல சொல்ல எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல்விசாரணையாக எடுத்துக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குயீடு செய்கிறேன்.

1. புகார்தாரருக்கு எதிரி கொடுத்த சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் காசோலை எண்.030641 என்ற எண் கொண்ட காசோலை அசல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 23.03.2022ம் தேதியன்று வழக்கு காசோலையை வசூலுக்காக வங்கியில் செலுத்தியவதற்கான செலுத்து சீட்டு வாடிக்கையாளர் பிரதி அசல் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது
3. 24.03.2022ம் தேதியிட்ட வழக்கு காசோலை Fund Insufficient என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டதற்காக திருப்புதல் குறிப்பாணை ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. 05.04.2022ம் தேதியன்று புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. வழக்கறிஞர் அறிவிப்பிற்கான அஞ்சலக ரசீது மற்றும் Online Track Consignment Report ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு வேண்டுகிறேன். மனுவில் கோரியவாறு நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

A AATHIYAN
Digitally signed by A AATHIYAN
Date: 2026.06.11 19:15:17 +0530